# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி : 25/2017

நாள்.24-08-2017

## நீட் தேர்வில் தமிழக மாணவர்களுக்கு அநீதி

விவசாயிகள் இறந்தகாலமும், மாணவர்களின் எதிர்காலமும் வேறுவேறானவை அல்ல.
இந்த நிகழ்காலம் இனியும் தொடர அனுமதிக்கக்கூடாது.

## மத்திய மாநில அரசுகளுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம்

இந்தியாவில் சமூகநீதிக்கான போராட்டங்களை முன்னெடுத்து மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இட ஒதுக்கீடு, பொது விநியோகம், வேலை வாய்ப்பு வசதி போன்றவற்றில் தனித்துவத் தன்மையுடன் இருந்து வந்த தமிழகம் திரு.நரேந்திர மோடி இந்தியப் பிரதமராக பதவியேற்ற பிறகு சமூகநீதிக்கான தனித்துவத்தையும் வாய்ப்புகளையும் ஒன்றன்பின் ஒன்றாக இழந்து வருகிறது. மோடி அரசின் கொள்கைகள் அனைத்தும் ஏழைத்தொழிலாளர்கள் விவசாயிகள், தினக்கூலிகள், நடுத்தர மக்கள், பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் என மேட்டுக்குடி தவிர்த்த அனைவரையும் கசக்கிப் பிழிந்து சொல்லொணா துயரத்திற்கு ஆட்படுத்தி, மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருகிறது. ஏழைகள் உபயோகப்படுத்தும் எரிவாயுவில் தொடங்கி, ரேஷன் பொருட்கள் வரை தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதார் கட்டாயம் என அலைகழித்தது முதல் அதை வங்கிக் கணக்கில் சேர்க்க வேண்டும் என்றும், வங்கிக்கணக்கிற்கு பான் கார்டு அவசியம் என்றும், ஸ்மார்ட் கார்டு என்றும் படிப்பறிவில்லாத, ஏழை எளிய மக்களை டிஜிட்டல் யுகத்திற்கு கொண்டு செல்கிறேன் பேர்வழி என்று அலைகழிக்கும் போக்குதான் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. மீனவர் பிரச்சனையாக இருக்கட்டும், விவசாயிகள் பிரச்சனையாக இருக்கட்டும், காவிரி பிரச்னையாக இருக்கட்டும், மாணவர் பிரச்சனையாக இருக்கட்டும் அதில் தமிழகத்தின் நலன்களை புறந்தள்ளி அதற்கு எதிரான நடவடிக்கைகளை கொஞ்சம்கூட மக்களைப் பற்றி சிந்திக்காமல் மோடி அரசு எடுத்து வருவதும், தமிழ்நாட்டிற்கான உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் போராட வேண்டிய தமிழக அரசோ ''பதவியை பறிக்காமல் ஆட்சியைக் கவிழ்க்காமல் நீ என்ன வேணாலும் செய்துக்கோ'' என்று மத்திய அரசிடம் அடிமைசாசனம் எழுதிக் கொடுத்து விட்டு, மீனவர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என யாரைப்பற்றியும் கவலைப்படாமல் எம்எல்ஏக்களுக்கு சம்பள உயர்வு பென்சன் உயர்வு என தங்கள் நலனையும் ஆட்சி பறிபோகாமல் இருக்க இராப்பகல் பாராமல் கட்சி ஒன்றிணைப்புக்காக கலந்து பேசி தமிழக மக்களை மறந்துபோன நிலையில் செயல்படாத அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நீட் தேர்வில் தமிழக மாணவர்களுக்கு விலக்கு பெற்றுத்தர ஏதோ பெயருக்கு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதும் அவர்கள் பிரதமரிடமும் மற்ற மத்தியஅமைச்சர்களிடமும் உண்மையில் நீட் தேர்வில் விலக்கு பற்றிதான் பேசினார்களா அல்லது தங்களுடைய ஆட்சிக்கு ஆபத்து வராமல் இருக்க தமிழக நலன்களை விட்டுக்கொடுக்க ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டு வந்தார்களா என்று தெரியவில்லை.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


சட்டசபையில் நீட் தேர்வு விலக்கிற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி அதை செய்துமுடிக்க தொடர் நடிவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விட்டதை அந்த சட்டமன்ற தீர்மானம் குடியரசுத் தலைவருக்கே போய்ச் சேரவில்லை என்ற அறிவிப்பு வந்தபின் அறிந்த தமிழக மாணவர்களும் பெற்றோர்களும் மனம் பதைத்துப் போனதுதான் மிச்சம். அதன்பிறகும் தமிழக அமைச்சர்கள் எவ்வாறெல்லாம் கபட நாடகம் நடித்தார்கள் என்பதை நாடே கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட தீர்மானம் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தேடிக் கொண்டிருந்த வேளையில், போகாத ஊருக்கு வழி சொல்லும் விதமாக இவர்களாகவே ஒரு அரசாணை வெளியிட்டு நீட் தேர்வில் தமிழக அரசின் பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்களுக்கு 85 சதவீத உள் ஒதுக்கீட்டை வழங்கினார்கள். மத்திய அரசின் சட்டத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட அவ்வரசாணை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட பின் உச்சநீதிமன்றம் ஓடினார்கள், அங்கும் அடிவாங்கிய பின் மத்திய அரசிடம் ஏதோ இதற்காகவே தவம் கிடப்பதாக நாடகமாடினார்கள். இவற்றையெல்லாம் நம்பி, கையில் மதிப்பெண் பட்டியலுடன் தமிழக மாணவர்கள் காத்துக்கிடந்தார்கள் அதிர்ஷ்டவசமாகவாவது ஏதாவது நடந்துவிடாதாவென்று.

நிர்மலா சீதாராமன் என்ற மத்திய அமைச்சர் தமிழகத்திற்கு ஒரு ஆண்டுக்குமட்டும் நீட் தேர்விலிருந்த விலக்கு அளிக்க அவசரச் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியிடுவதும் அதை எதிர்த்து மத்திய அரசின் பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குதொடர்ந்த போது மத்திய அரசின் வழக்கறிஞர் ஒரு மாநிலத்திற்கு மட்டும் விலக்கு கொடுப்பது என்பது சரியானதாக இருக்காது என்று சொல்வதும் இவர்கள் நடத்திய கபட நாடகத்தின் உச்சம். இதற்குப் பிறகும் தம்பித்துரை போன்ற அதிமுகவின் தலைவர்கள் இதற்காக மத்திய அரசை குறை சொல்ல முடியாது என்றும் நீட் தேர்வு விவகாரம் தொடர்பாக தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவோம் என்றும் கொஞ்சம் கூட வெட்கப்படாமல் ஊடகத்திற்கு பேட்டியளிக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் மருத்துவப்படிப்புக்கு இரண்டு கட்ட கலந்தாய்வுகள் முடிந்துவிட்ட நிலையில் தம்பித்துரை போன்றவர்களின் இன்னும் முயற்சிப்போம் என்ற பேச்சு மக்களிடம் அருவெறுப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கிடையில் தமிழக அரசும் நீட் தேர்வில் தேர்ச்சியான மாணவர்களின் ரேங்க் அடிப்படையில் கலந்தாய்வுக்கு தேதியை அறிவித்துள்ளது.

தமிழகத்தின் சமூகநீதியை சூறையாடப்பார்க்கும் மத்திய அரசின் நயவஞ்சகப்போக்கு, மாநில அரசின் அலட்சியத் தன்மை இவற்றால் காவிரியில் நீர் பெறுவதிலும், கர்நாடகா அணை கட்டுவதிலும், மீனவர்கள் சுட்டு வீழ்த்தப்படுவதிலும், தமிழக மாணவர்களின் உரிமைகளைக் காப்பதிலும் நாம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருகிறோம். செயலற்றுக் கிடந்தால் கூட பரவாயில்லை ஆனால் நயவஞ்சக மத்திய அரசுடன் நம்பிக்கையான கூட்டாளியாக, ஆட்டுவித்தால் ஆடும் தலையாட்டி பொம்மையாக தமிழகத்தின் அரசும் அமைச்சர்களும் இருப்பதை இனியும் பொதுமக்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் தமிழகத்தின் தலையாய உரிமைகள் அனைத்தையும் இழந்து நாம் அடிமைகளாகத்தான் வாழ வேண்டி வரும்.

நேற்று விவசாயிகளின் இறந்தகாலமும் இன்று மாணவர்கள் எதிர்காலமும் வேறு வேறானவை அல்ல. இந்த நிகழ்காலம் மிகவும் ஆபத்தானது என்பதை இன்னும் என்ன என்ன உரிமைகளை இழந்து நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்று தெரியவில்லை. தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை பாழடித்து விட்ட, தமிழக மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்ட தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. நீட் தேர்வில் தமிழக மாணவர்களின் நலன்களை குழிதோண்டிப் புதைத்த மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக நடக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு, போராட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னுடைய ஆதரவை முழுமையாக பதிவு செய்கிறது.

**(மு. அன்பரசு)**

பொதுச் செயலாளர்